தினமணி

## ரூ.2.46 கோடியில் வேளாண் இயந்திரங்கள்

First Published : 01 Apr 2012 02:02:27 PM IST

ஸ்ரீபெரும்புதூர், மார்ச் 31: காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 1,308 முதியோர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கும் விழா மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு ரூ2.46 கோடியில் டிராக்டர்கள், வேளாண் இயந்திரங்கள் வழங்கும் விழா ஸ்ரீபெரும்புதூரில் சனிக்கிழமை நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் ஹனீஸ் சாப்ரா தலைமை தாங்கினார். வருவாய் கோட்டாட்சியர் வீரப்பன், வட்டாட்சியர் லட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட வருவாய் அலுவலர் சுதர்சன் வரவேற்றார்.

சட்டப்பேரவை உறுப்பினர்கள் மொளச்சூர் இரா.பெருமாள், சோமசுந்தரம், பா.கணேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சிறப்பு அழைப்பாளராகக் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் டி.கே.எம். சின்னையா கலந்து கொண்டு காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 1,308 முதியோருக்கு, முதியோர் உதவித் தொகைக்கான ஆணையை வழங்கினார்.

மேலும் விவசாயிகள் குறைந்த வாடகையில் பண்ணை இயந்திரங்களை எடுத்துக் கொள்ள ஏதுவாக 30 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு ரூ 2.46 கோடி மதிப்பீட்டில் 19 டிராக்டர்கள், 19 ரோடவேடர்கள், 19 கல்டிவேட்டர்கள்,7 அறுவடை இயந்திரங்கள், 2 நாற்று நடவு இயந்திரங்கள், 2 மினி டிராக்டர்கள், 2 பவர்டில்லர்கள் ஆகியவற்றை வழங்கி சிறப்புரையாற்றினார்.

ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியகுழு தலைவர் வெங்கடேசன், குன்றத்தூர் ஒன்றியக்குழு தலைவர் பழனி, ஒன்றியக்குழு துணைத் தலைவர் சிவகுமார், மாவட்டக் கவுன்சிலர் குமாரவடிவேலு, ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சித் தலைவர் பரிமளாகுமார், காட்டரம்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் மோகன் உள்ளிட்டோர் கலந்துக் கொண்டனர்.

## இந்தியா"பணவீக்கம் 7 சதவீதமாகக் குறையும்'

First Published : 01 Apr 2012 12:58:22 AM IST



கொல்கத்தா, மார்ச் 31: வரும் நிதி ஆண்டில் நாட்டின் பணவீக்கம் 6 சதவீதம் முதல் 7 சதவீதத்துக்குள் இருக்கும் என்று மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த ரிசர்வ் வங்கி எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு உரிய பலன் கிடைக்கும் என்று தான் உறுதியாக நம்புவதாக அவர் குறிப்பிட்டார்.

இரண்டு ஆண்டுகளாக பணவீக்கம் இரட்டை இலக்கத்திலேயே இருந்தது.

உணவுப் பணவீக்கம் அதிகபட்சமாக 22 சதவீதத்தை எட்டியிருந்தது. பிப்ரவரி மாதத்திலிருந்து ஒட்டுமொத்த விலைக் குறியீட்டெண் அடிப்படையில் 6.95 சதவீதமாக இருந்தது. முந்தைய மாதம் இது 6.55 சதவீதமாக இருந்தது.

வரும் நிதி ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி வளர்ச்சிப் பாதைக்கு எடுத்துச் செல்வதே பிரதான நோக்கமாகும். தனியார் துறையை ஊக்குவிக்கும் வகையில் அடுத்த ஆண்டு நேரடி வரிவிதிப்பு வரைவு அமல்படுத்தப்பட உள்ளது என்றார். பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட்டால் பணப் புழக்கம் அதிகரிக்கும்.

இதனால் வெளிச் சந்தையில் நிறுவனங்களுக்கு எளிதாகக் கடன் கிடைக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

1989-ம் ஆண்டிலிருந்து இந்திய வாக்காளர்கள் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை வாய்ப்பை அளிப்பதில்லை. ஆட்சி செய்யும் அதிகாரத்தை அளிப்பார்கள். ஆனால் அதை மற்றவர்களின் ஒத்துழைப்புடன்தான் நிறைவேற்ற வேண்டும் என்ற நிலை உள்ளது. இத்தகைய இக்கட்டான சூழலில் சில அறிவிப்புகளை பட்ஜெட்டில் முன்வைத்துள்ளேன்.

உணவு மற்றும் உர மானியத்தைப் பொறுத்தவரை பட்ஜெட்டில் சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

மானியச் சுமையை நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 2 சதவீதமாகக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் பெட்ரோல் விலை உயர்த்தப்பட்டது. அதற்குப் பிறகு சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை உயர்த்தப்பட்ட போதிலும் உள்நாட்டில் விலை உயர்த்தப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

## அத்தியூர் கிராமத்தில் பண்ணைப் பள்ளி வயல் விழா

First Published : 01 Apr 2012 10:42:00 AM IST

பெரம்பலூர், மார்ச் 31: பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் வட்டாரத்தில் உள்ள அத்தியூர் கிராமத்தில், பண்ணைப் பள்ளி வயல் விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த விழாவுக்கு தலைமை வகித்த, வாலிகண்டபுரம் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் இரா. மாரிமுத்து பேசியது:

பெரம்பலூர் மாவட்ட அட்மா திட்ட இயக்குநரின் பரிந்துரையின் பேரில், அத்தியூர் கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் நெல் பயிரில் பண்ணைப் பள்ளி நடைபெறுகிறது. இந்தப் பண்ணைப் பள்ளிக்கு நெல் சாகுபடி செய்யும் 25 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு 6 வகுப்புகள் வீதம் மண் நீர் மேலாண்மை, களை நிர்வாகம், உரம், நுண்ணூட்ட மேலாண்மை, பூச்சி, நோய் மேலாண்மை மற்றும் அறுவடைக்குப்பின் பின்செய் நேர்த்தி முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன. மேலும், ஒரு ஹெக்டேர் நெல் வயல் தேர்ந்தெடுத்து, அதில் நெல் நடவு முதல் அறுவடை வரை அனைத்து தொழில் நுட்பங்களும் செயல் விளக்கமாக செய்து காண்பிக்கப்பட்டது என்றார் அவர். இதில், வேளாண் உதவி அலுவலர் நெப்போலியன், அட்மா திட்ட அலுவலர்கள் ர. பிரதிபா, ரா. அதிரூபன் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை, மைய தொழில் நுட்ப வல்லுநர் ப. விஜயலட்சுமி செய்திருந்தார்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## காய்கறி உற்பத்தி குறைவு : வெயில் தாக்கம் எதிரொலி

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 02,2012,01:07 IST

கருத்தை பதிவு செய்ய

ஆனைமலை : ஆனைமலை சுற்றுப்பகுதியில் வெயிலின் தாக்கத்தால் பச்சை காய்கறிகளின் உற்பத்தி குறைந்துள்ளது.

ஆனைமலை சுற்றுப்பகுதிகளான சேத்துமடை, வேட்டைக்காரன்புதூர், காளியாபுரம், பெரியபோது, திவான்சாபுதூர், செமணாம்பதி, மூங்கில்மடை, செராம்பி போன்ற இடங்களில் பச்சை காய்கறி வகைகளும், பச்சை, வெள்ளை, சிவப்பு போன்ற தட்டை பயிறு வகைகளும்,

வாழை, தக்காளி, பச்சை மிளகாய் போன்றவைகளும் பயிரிடப்பட்டு வருகின்றன.
தற்போது மழைப்பொழிவு குறைந்துள்ளதால், உற்பத்தியும் குறைந்துள்ளது. தண்ணீர் பற்றாக்குறை, வெயில் போன்றவற்றால் விவசாயிகள் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். தக்காளியின் உற்பத்தியும் குறைந்துள்ளது. மீனாட்சி
புரம் காய்கறி கமிஷன் மண்டிக்கு தக்காளியின் வரத்தும், பயிறுவகைகள், வெண்டைக்காய் போன்றவையும் வரத்து குறைந்துள்ளது.

## உணவு பதப்படுத்துதல் கருத்தரங்கு

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 02,2012,01:01 IST

கருத்தை பதிவு செய்ய
கோவை : தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி நிறுவனம் மற்றும் இந்திய அரசின் உணவு பதப்படுத்துதல் அமைச்சகம் சார்பில், "உணவு பதப்படுத்துதல் மற்றும் தொழில்கள்' எனும் தலைப்பில் இரண்டு நாள் கருத்தரங்கம், கோயிண்டியா அரங்கில் நடந்தது.
கருத்தரங்கில், தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி நிறுவன இயக்குனர் மோகன்ராம் வரவேற்றார். மாவட்ட தொழில் மைய பொதுமேலாளர் ராமசுப்பு தலைமை வகித்தார்.
தமிழ்நாடு வேளாண் பல்கலை உதவி பேராசிரியர் பார்த்திபன், நபார்டு வங்கியின் துணை பொதுமேலாளர் அருள்செல்வன், கோயிண்டியா பயிற்சி மைய அதிகாரி ராஜாஜி உள்ளிட்டோர் பல்வேறு தலைப்புகளில் பேசினர்.
தமிழகத்தில் உணவு பதப்படுத்துதல் துறையில் உள்ள வாய்ப்புகள் மற்றும் தற்போதைய நிலைகள், புதுமையான வழிமுறைகளை புகுத்துதல், மேம்படுத்துதல், ஏற்றுமதி, இறக்குமதி வாய்ப்புகள் குறித்து துறை சார்ந்த நிபுணர்கள் மூலம் விளக்கப்பட்டது. "கொடிசியா' தலைவர் கந்தசாமி மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை டாக்டர்கள், தோட்டக்கலை துறையினர் உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

## வாழை சாகுபடியில் பரளி ஆதிவாசிகள் ஆர்வம்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 02,2012,00:47 IST

கருத்தை பதிவு செய்ய
குன்னூர் : தமிழக கேரள எல்லையில் வசிக்கும் பரளி ஆதிவாசி மக்கள், வாழை உற்பத்தியில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

தமிழக கேரள எல்லைப்பகுதியான முள்ளி, பரளி பகுதிகளில்; 150க்கும் மேற்பட்ட இருளர் இன குடும்பங்கள் வசிக்கின்றன. அடர்ந்த வனம் சூழ்ந்த பகுதியான இங்கு யானை, காட்டெருமை, சிங்கவால் குரங்கு, காட்டுப் பன்றி, சிறுத்தை உட்பட வன விலங்குகள் உள்ளன.

வன விலங்குகளின் அச்சுறுத்தல் இருந்தாலும், இங்கு வாழும் ஆதிவாசி மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்து வருகின்றனர். இங்குள்ள விவசாயிகளின் முக்கிய தொழில் வாழை சாகுபடி. வாழை மரங்கள் அதிகளவில் இருப்பதால், உணவு தேடி வரும் யானைக் கூட்டம் வாழை மரங்களை ருசி பார்க்கும் சம்பவங்களும் நடக்கின்றன.

தோட்டங்களுக்கு இடையேயுள்ள மரங்களின் மீது கூடாரம் அமைத்து, மாலை, இரவு நேரங்களில் யானைகளை கண்காணித்து, அவற்றை விரட்டி, வாழைத் தோட்டங்களை பாதுகாக்கும் பணியில் ஆதிவாசி இன இளைஞர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இருளர் இனத்தை சேர்ந்த முருகன் கூறுகையில், ""மாலை 7.00 மணிக்கு மேல் யானைகள் நடமாட்டத்தை இப்பகுதிகளில் அதிகளவில் பார்க்க முடியும்.

சாகுபடி செய்யும் வாழை பழங்களுக்கு கேரளாவில் கிராக்கி அதிகம்; கேரளாவில், ஓணம் உட்பட பண்டிகைகளின் போது வாழைப் பழங்களுக்கு நல்ல விலை கிடைக்கும்; மற்ற சமயங்களிலும் கட்டுப்படியாகும் விலையே கிடைத்து வருகிறது.

யானைகள் தோட்டங்களுக்குள் நுழையாமல் இருக்க வனத்துறை சார்பில் சோலார் மின்வேலி அமைக்கப்பட்டிருப்பினும், யானைகள் நுழைவதை தடுக்க முடியவில்லை; யானைகளின் வழித்தடம் பாதிக்காமல், அவற்றிற்கு இடையூறு ஏற்படாத வகையில், யானைகள் தோட்டங்களுக்குள் புகுவதை தடுக்க நிரந்தர ஏற்பாடுகளை செய்து கொடுத்தால், நிம்மதியாக விவசாயம் செய்வோம்," என்றார்.

## பட்டுகூடு அறுவடையில் லாபம் பெற மத்திய பட்டு விஞ்ஞானி அறிவுரை

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 02,2012,07:15 IST

தர்மபுரி: ""பட்டு கூடு அறுவடையில் புதிய தொழில்நுட்பங்களை கடைபிடித்தால் அதிக லாபம் ஈட்டலாம், " என மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி மாசிலா மணி தெரிவித்தார்.

தர்மபுரி அடுத்த நல்லம்பள்ளி தொழில்நுட்ப சேவை மையத்தில், பட்டு விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம் நடந்தது. இந்த முகாமில் சுற்றுவட்டார கிராமங்களை சேர்ந்த, 55 பட்டு விவசாயிகள் கலந்து கொண்டனர். தர்மபுரி பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் ஜெயக்குமார் தலைமை வகித்தார். நல்லம்பள்ளி தொழில்நுட்ப சேவைமைய உதவி ஆய்வாளர் குமரகுரு வரவேற்றார். முகாமில், பட்டு வளர்ப்பு விவசாயிகளுக்கு தமிழக அரசு வழங்கும் மானிய உதவிகள், பட்டுக்கூடு அறுவடையில் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள் ஆகியவை

குறித்து பட்டு வளர்ச்சி துறை அதிகாரிகள் எடுத்து கூறினர்.
அதன்பின், மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி மாசிலாமணி பட்டு வளர்ப்பில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளிடம் கலந்துரையாடி பேசியதாவது: மல்பரி சாகுபடி செய்வதற்கு முன், மண் பரிசோதனை செய்து உரமிட வேண்டும். பசுந்தாள் உரம், உயிர் உரம் இடுவதால் உரச்செலவு குறையும். மண் தரம் பாதுகாக்கப்படுகிறது. இலையின் தரமும் உயருகிறது. புழுவளர்ப்பு மனைக்கு முறையான மருந்தடிப்பு மற்றும் படுக்கை கிருமிநாசினிகள் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு செய்வதால் புழு தாக்குதல் இல்லாமல் அறுவடை செய்ய முடியும். பட்டுக்கூடு அறுவடையில் பட்டு முட்டை அடைகாத்தல், இளம்புழு வளர்ப்பின் முக்கியத்துவம் காற்றோட்டமான தனி புழுவளர்ப்பு மனையில் புழுவளர்ப்பு செய்தால் அறுவடை கேடு வராமல் வெற்றிகரமான அறுவடை செய்ய முடியும். இந்த தொழில்நுட்பங்களை கடைபிடித்து வெண்பட்டு வளர்ப்பு செய்து அதிக லாபம் ஈட்டலாம். இவ்வாறு அவர் பேசினார்.
முகாம் ஏற்பாடுகளை நல்லம்பள்ளி தொழில்நுட்ப சேவைமைய அலுவலர்கள் செய்திருந்தனர்.

## இடைத்தரகர்கள் தலையீடால் நலத்திட்டம் பெறுவதில் சிக்கல்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 02,2012,01:50 IST

கள்ளிக்குடி, ஏப்.2-கள்ளிக்குடி இடைத்தரகர்கள் அட்டகாசத்தால் நலத்திட்ட உதவிகளை பெறமுடியாமல் பொதுமக்கள் அவதிப்படுகின்றனர்.
கள்ளிக்குடி ஒன்றியத்தில் கள்ளிக்குடி, குராயூர், சிவரகோட்டை, டி.கொக்குளம் வருவாய் உள்வட்டங்கள் உள்ளன. இங்கு வருவாய் ஆய்வாளர்கள், வி.ஏஓ.,க்கள் பணிநேரத்தில் தங்கள் அலுவலகங்களில் இருப்பதில்லை.
இதனால் அரசின் உதவித்தொகை, பட்டா மாறுதல் உள்ளிட்ட பணிகளுக்கு பொதுமக்கள் நேரடியாக அலுவலர்களை அணுக முடியவில்லை. எல்லா கிராமங்களிலும் இதற்கென புரோக்கர்கள் உள்ளனர். இவர்கள் மூலம் வரும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலிக்கப்படுகிறது. உதவித்தொகை பெற ரூ. 4 ஆயிரம், பட்டா மாறுதலுக்கு இட மதிப்பின் அடிப்படையில் ரூ.3 ஆயிரம் முதல் ரூ. 10 ஆயிரம், திருமண உதவித்தொகைக்கு ரூ. 3 ஆயிரம், சாதி, இருப்பிடம், பிறப்பு, இறப்பு சான்றிதழ்களுக்கு ரூ. 2 ஆயிரம் என்று பட்டியல் போட்டு புரோக்கர்கள் வசூல் செய்கின்றனர். சென்னம்பட்டி, சிவரகோட்டை மறவபட்டி, பேய்குளம் பகுதியில் டிராக்டர்கள், மாட்டு வண்டிகளில் மணல் ஜோராக கடத்தப்படுகிறது. இதற்கு மாதாமாதம் புரோக்கர்கள் மூலம் ரூ. பலஆயிரங்கள் மாமூல் வசூல் நடக்கிறது.

## வெண்டையில் நிறமாற்றம் : வெதும்பும் விவசாயிகள்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 02,2012,01:52 IST

கருத்தை பதிவு செய்ய

கொட்டாம்பட்டி : கொட்டாம்பட்டி அருகே வெள்ளிமலையில் வெயிலின் தாக்கம் மற்றும் தண்ணீர் பற்றாக்குறையால், வெண்டை விவசாயிகள் மனம் வெதும்பி உள்ளனர்.

விவசாயி சின்னக்கண்ணு கூறுகையில், ""ஒரு ஏக்கரில் வெண்டை பயிரிட ரூ.40 ஆயிரம் செலவாகிறது. ஒருநாள்விட்டு ஒருநாள் தண்ணீர் பாய்ச்சவேண்டும். தற்போது, தினமும் 3 மணி நேரம் மட்டும் விவசாயத்திற்கு மின்சாரம் வழங்குவதால், தேவையான அளவு தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை. இத்துடன் வெயிலின் தாக்கத்தாலும் காய்கள் நிறம்மாறி, கடினத் தன்மையுடன் உள்ளன," என்றார்.

விவசாயி சின்னத்துரை கூறுகையில், ""வெண்டை பயிரிட்ட 45வது நாள் முதல் அறுவடை செய்யலாம். அதன்பிறகு 25 நாள் வரை ஒருநாள் விட்டு ஒருநாள் காய்கள் பறித்து சந்தைக்கு அனுப்புவோம். தற்போது தண்ணீர் பற்றாக்குறையால் ஒருமுறை பறித்த நிலையில், காய்கள் அனைத்தும் நிறம்மாறி விட்டன. அவற்றை சமையலுக்கும் பயன்படுத்த முடியவில்லை. இவற்றை விரும்பி உண்ணும் ஆடுமாடுகளுக்கும் வாயில் ரத்தம் வடிவதால் அவற்றுக்கு உணவாகவும் தரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது, என்றார்.

## புதிய தொழில் முனைவோருக்கு "டிக்' முன்னுரிமை:வேளாண், உணவு பதப்படுத்துதல் தொழில்களுக்கு ரூ.100 கோடி கடன்

ஏப்ரல் 02,2012,00:23



தமிழகத் தொழில் முதலீட்டு கழகம் (டிக்), வேளாண் மற்றும் உணவு பதப்படுத்துதல் தொழில்களுக்கு, நடப்பு 2012-13ம் நிதியாண்டில் 100 கோடி ரூபாய் கடன் வழங்கத்

திட்டமிட்டுள்ளது.நிலம், கட்டடம், இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் வாங்குவதற்கு, நீண்ட கால தவணையில் கடன் வழங்கி வரும், தமிழக அரசின், "டிக்' மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றி வருகிறது.

அரிசி மற்றும் மாவு ஆலைகள், எண்ணெய் உற்பத்தி, கடல் உணவுப் பொருட்கள் பதப்படுத்துதல் போன்ற 25க்கும் மேற்பட்ட வேளாண் பொருள் மதிப்புக்கூட்டு தொழில் துவங்குவோருக்கு, கடன் வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

**மாறுபடும் வட்டி விகிதம்:** ஒரு தொழில் நிறுவனத்திற்கு, குறைந்தபட்சம் 14.75 சதவீதம், அதிகபட்சம் 16.25 சதவீதம் வட்டியில், இரண்டு லட்சம் ரூபாய் முதல் 20 கோடி ரூபாய் வரை கடன் வழங்கப்படுகிறது. இங்கு வழங்கப்படும் கடன்களுக்கு, மாறுபடும் வட்டி விகித முறை பின்பற்றப்படுகிறது."டிக்' மூலம் பல்வேறு தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மொத்த கடனில், 12 சதவீதம் வேளாண் மற்றும் அது சார்ந்த தொழில்களுக்கு அளிக்கப்படுகிறது.

**மானிய உதவி:**தமிழகத்தில் உள்ள 385 ஒன்றியங்களிலும், வேளாண் மற்றும் உணவு பதப்படுத்துதல் தொழில்களைத் துவங்குவோர்களுக்கு, இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் வாங்குவதற்கு அதன் மொத்த முதலீட்டில், குறைந்தபட்சம் 15 சதவீதம், அதிகபட்சம் 30 லட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படுகிறது.இவை தவிர, மத்திய அரசின் உணவு பதப்படுத்துதல் துறை சார்பில், இயந்திரம் வாங்குவதற்கும், உற்பத்திக் கூடம் கட்டுவதற்கும் (சாலை, குடிநீர் தொட்டி, சுற்றுச் சுவர் தவிர) மானியம் வழங்கப்படுகிறது.

திட்டத்தின் மொத்தச் செலவில், குறைந்தபட்சம் 25 சதவீதம் என்ற அளவில் அதிகபட்சம் 50 லட்சம் ரூபாய் வரை மானியம் அளிக்கப்படுகிறது.மத்திய அரசு, "கிரெடிட் லிங்க்ட் கேபிடல் சப்சிடி ஸ்கீம்' என்ற திட்டத்தின் கீழ், கரும்பு அறுவடை இயந்திரம் போன்ற குறிப்பிட்ட வேளாண் இயந்திரங்கள் வாங்குவதற்கு, குறைந்தபட்சம் 15 சதவீதம் என்ற அளவில், அதிகபட்சம் 15 லட்சம் ரூபாய் வரை மானியம் வழங்குகிறது.

மேற்கண்ட மானியங்கள் அனைத்தும் உற்பத்தி சார்ந்த தொழில்களுக்கு மட்டுமே அளிக்கப்படுகிறது. இந்த மானியங்களை மத்திய, மாநில அரசுகளிடமிருந்து, பெற்றுத் தரும் முகமை அமைப்பாகவும், "டிக்' செயல்படுகிறது. இது தவிர, மூலப்பொருட்கள், ஊதியம் உள்ளிட்ட செலவினங்களைச் சமாளித்து, தொய்வின்றி தொழிலைத் தொடர உதவும் வகையில், தொழில் முனைவோருக்கு நடைமுறை மூலதனமும் வழங்கப்படுகிறது. மாநிலத்தின் வேளாண் உற்பத்தியை அதிகரிக்கவும், உணவு பதப்படுத்துதல் தொழிலின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையிலும், நடப்பு 2012-13ம் நிதியாண்டில், 100 கோடி ரூபாய் கடன் வழங்கத் திட்டமிட்டுள்ளது.

**சுய தொழில்:**இதுகுறித்து, பெயர் வெளியிட விரும்பாத அதிகாரி ஒருவர் கூறியதாவது:ஆண்டுதோறும், பொறியியல் மற்றும் தொழில்கல்வி பயில்வோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் அமைந்துள்ள

பன்னாட்டு தொழிற்சாலைகளுக்கு, வேலைக்காக பல மாவட்டங்களிலிருந்து ஏராளமான இளைஞர்கள் வருகின்றனர்.

அப்படி வருபவர்கள், "டிக்' அலுவலகத்தைத் தொடர்பு கொண்டால், தாங்கள் சார்ந்த மாவட்டத்திலேயே, மேற்கண்ட தொழில்களைத் துவங்க, கடன் வழங்கப்படும். புதிய தொழில் முனைவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இதன் மூலம், படித்த இளைஞர்கள் சுயதொழில் செய்து, சொந்தக் காலில் நிற்க வழி ஏற்படும். இவ்வாறு அவர் கூறினார்.- வீ.அரிகரசுதன் -

## உரம் இறக்குமதி 7 சதவீதம் குறைந்தது

ஏப்ரல் 02,2012,00:19



புதுடில்லி: நடப்பு நிதியாண்டின் 11 மாத காலத்தில், உரம் இறக்குமதி 7 சதவீதம் குறைந்துள்ளது என மத்திய அரசு தெரிவித்துள்ளது. நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் பிப்ரவரி வரையிலான, 11 மாத காலத்தில், 68 லட்சத்து 70 ஆயிரம் டன் டை அம்மோனியம் பாஸ்பேட் உரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இது, இதற்கு முந்தைய 2010-11ம் நிதியாண்டின் இதே காலத்தில், மேற்கொள்ளப்பட்ட இறக்குமதியை விட, 7 சதவீதம் (74 லட்சத்து 10 ஆயிரம் டன்) குறைவாகும். சர்வதேச அளவில் உரம் மற்றும் மூலப்பொருள்கள் விலை அதிகரித்ததால், பாஸ்பேட் மற்றும் பொட்டாசியம் வகை உரங்களின் விலை உயர்ந்துள்ளது. அதே சமயம், உள்நாட்டில் உரங்களுக்கான அதிகபட்ச சில்லரை விலை உயர்த்தப்படவில்லை. இந்நிலையில், தற்போது சர்வதேச அளவில் உரம் விலை குறையத் துவங்கியுள்ளது என மத்திய அரசு மேலும் தெரிவித்துள்ளது.

**நறுமணப் பொருட்கள் பூங்காவால் சிவகங்கையில் ரூ.20 கோடி விரயம்**

ஏப்ரல் 02,2012,00:15



சிவகங்கை:சிவகங்கையில் அடிக்கல் நாட்டி, 4 ஆண்டுகளாகியும் 100 கோடி ரூபாய் செலவிலான "நறுமணப் பொருட்கள் பூங்கா' திட்டம் செயல்படாமல் முடங்கியுள்ளது.மாவட்டத்தில் நெல், கரும்பு மற்றும் தானிய பயிர்களை அதிக அளவில் விவசாயிகள் நடவு செய்கின்றனர். இத்துடன் மஞ்சள், கிராம்பு, ஏலம், மிளகாய் போன்ற பணப்பயிர்களை உற்பத்தி செய்து, அதிக வருவாய் ஈட்ட வேண்டும் என்பதற்காக, சிவகங் கையில் "நறுமணப் பொருட்கள் பூங்கா' என்ற சந்தை அமைக்கத் திட்டமிடப்பட்டது.

இதற்காக,கொட்டகுடி ஊராட்சி, மானாகுடி ரோட்டில் 75 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. 2008ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், மத்திய அமைச்சர் சிதம்பரம் இப்பூங்காவிற்கு அடிக்கல் நாட்டினார். 20 கோடி ரூபாயில் குடோன், ஏற்றுமதியாளர் அறை, "ஸ்பைசஸ்' வாரிய அலுவலகம், நறுமணப் பொருட்கள் தயாரிப்பு நிலைய கட்டடம் கட்டும் பணி நடந்து வருகிறது. இதற்கு பின், 100 கோடிரூபாயில் மஞ்சள், மிளகாய், ஏலம், மிளகை சந்தைப் படுத்துதல், "ஸ்பைசஸ் வாரியம்' மூலம் நறுமணப் பொருட்களை பொடியாக்கி, பாக்கெட்களாக தயாரித்து ஏற்றுமதி செய்ய, வாரியம் திட்டமிட்டுள்ளது. ஆனால், 20 கோடி ரூபாயில் நடக்கும் கட்டுமான பணிகளே, கடந்த நான்கு ஆண்டுகளாக இழுபறியாக நடந்து வருகிறது. இதனால், பூங்கா திறக்கும் திட்டம் சிவகங்கையில் முடங்கிக் கிடக்கிறது.இது குறித்து "ஸ்பைசஸ்' வாரிய உதவி இயக்குனர் (வர்த்தகம்) நிதின்ஜோ கூறியதாவது:

கட்டுமான பணிகள் முடியும் தறுவாயில் உள்ளன. விரைவில் இப்பூங்காவிற்கு மின்இணைப்பு பெறப்பட்டு, ஜூனில் செயல்பாட்டிற்கு வரும். நறுமணப் பொருட்களை சந்தைப்படுத்த, 40 ஏக்கர் நிலம் ஒதுக்கியுள்ளோம். ஒவ்வொரு வியாபாரிக்கும் ஒரு ஏக்கர் நிலம், ஆண்டிற்கு 1,000 ரூபாய்க்கு மட்டுமே வாடகைக்கு விடப்படும். நறுமணப் பொருட்கள் ஏற்றுமதியானால், ஈரோடு போல் சிவகங்கை பூங்காவும் பெரிய நறுமணப் பொருள்கள் சந்தையாக உருவெடுக்கும், என்றார்.

**புகையிலை உற்பத்தியில் சரிவு: விலையும் குறைந்தது**

ஏப்ரல் 01,2012,14:18



பொங்கலூர்: புகையிலை உற்பத்தியில் சரிவு ஏற்பட்டுள்ளதால், விலை குறைந்துள்ளது. இதனால் வியாபாரிகள் கவலையில் உள்ளனர். சில ஆண்டுகளுக்கு முன், பொங்கலூர் வட்டார பகுதிகளில், புகையிலை விவசாயம் அமோகமாக நடந்தது. இப்பகுதியில் விளையும் புகையிலை, கொடுவாய் சுற்றுவட்டார பகுதியில் உள்ள குடோன்களுக்கு அனுப்பப்பட்டு, அங்கு பதப்படுத்தப்பட்டன. அவை அங்கிருந்து தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும், கேரளா உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கும் விற்பனைக்காக அனுப்பப்பட்டன. புகையிலை பதப்படுத்தும் தொழிலில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டனர்; தற்போது, புகையிலை சார்ந்த தொழில்களுக்கு ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், புகையிலை தொழில் நலிவடைந்துள்ளது. புகையிலை கசப்புத் தன்மையுடன் இருப்பதால், தோட்ட வேலைக்கு ஆட்கள் கிடைப்பதில்லை; சரியான விலையும் கிடைப்பதில்லை; புகையிலை சாகுபடி செய்வதை பெரும்பாலான விவசாயிகள், கைவிட்டு வருகின்றனர்.

உள்ளூரில் புகையிலை விவசாயம் நின்று விட்டதால், வியாபாரிகள் தென் மாவட்டங்களுக்குச் சென்று பச்சை புகையிலையை வாங்கி வருகின்றனர். வியாபாரிகள் ஓராண்டு தேவைக்கான புகையிலையை அறுவடை சீசனில் மொத்தமாக வாங்கி இருப்பு வைத்து பதப்படுத்தி விற்பனை செய்கின்றனர். பச்சை புகையிலை கொள்முதல் விலை, ஒரு டன் 5,500 ரூபாயாக உள்ளது. பதப்படுத்தப்பட்ட புகையிலை தண்டுப்பகுதி கிலோ 150 ரூபாய்க்கும், இலை ஒரு கிலோ 35 ரூபாய்க்கும் விற்பனையாகிறது. தற்போது, புகையிலை சார்ந்த பொருட்களை பயன்படுத்த எதிர்ப்பு வலுத்து வருவதாலும், மக்களிடம் ஏற்பட்ட விழிப்புணர்வாலும் புகையிலை விற்பனை மந்தமாக உள்ளது; புகையிலை பொருட்கள் விலையும் சரிவடைந்து வருகிறது. தொழில் பாதிக்கப்பட்டு தொழிலாளர்களும், தொழில் முனைவோரும் பாதிக்கப்படுகின்றனர்.

வியாபாரிகள் கூறுகையில், "கொடுவாய் பகுதியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட குடோன்கள் இருந்தன. தொழிலில் ஏற்பட்ட நெருக்கடியால், தொழில் செய்ய முடியாமல், பலரும் கைவிட்டு விட்டனர்; குடோன்களை பலரும், லீசுக்கு விட்டுள்ளனர். தற்போது, சில குடோன்கள் மட்டுமே செயல்படுகிறது. முன்பு கேரளாவில் கடலுக்கு மீன் பிடிக்க செல்லும் மீனவர்கள் புகையிலை சார்ந்த பொருட்களை அதிகமாக உபயோகித்ததால், கேரளாவில் விற்பனை வாய்ப்பு நன்றாக இருந்தது. தற்போது, இளைஞர்களிடம் புகையிலை சார்ந்த பொருட்களை வாங்கும் ஆர்வம் குறைந்து வருவதால் விற்பனை சரிந்துள்ளது. இதனால், சரியான விலையும் கிடைப்பதில்லை,' என்றனர்.

## வெங்காயம் விலை வீழ்ச்சி! சாலையில் கொட்டும் அவலம்!

ஏப்ரல் 01,2012,12:44



திண்டுக்கல்:அதிக விளைச்சலால் விலை கிடைக்காமல், வெங்காயத்தை செடியில் இருந்து பறிக்காமல் விட்டுள்ளனர். சிலர், சாலை ஓரத்தில் கொட்டி, தானம் செய்து வருகின்றனர். திண்டுக்கல் சின்னாளபட்டி, எரியோடு, வேடசந்தூர், குஜிலியம்பாறை, அய்யலூர், செங்குறிச்சி பகுதிகளில் வெங்காயம் பயிரிடப்படுகிறது. திண்டுக்கல் சந்தையில் இருந்து வெளி நாடுகளுக்கும்; ஒட்டன்சத்திரம் சந்தை மூலம் மற்ற மாநிலங்களுக்கும் செல்கின்றன. ஏற்றுமதியில் அதிக லாபம் கிடைத்ததால், இந்த ஆண்டு ஆர்வத்துடன் பயிரிட்டனர். இந்நிலையில், இலங்கை, மலேசியா, இந்தோனேஷியா உள்ளிட்ட நாடுகளிலும், வெங்காய உற்பத்தி அதிகரித்தது. இதனால் ஏற்றுமதி வாய்ப்பு குறைந்துவிட்டது.
தேவைக்கு அதிகமாக உற்பத்தியானதால், உரிய விலை இல்லை.இதனால், திண்டுக்கல் பகுதிகளில், வயலில் இருந்து வெங்காயத்தை பறிக்காமல் விட்டுள்ளனர். சில விவசாயிகள், பறித்த வெங்காயத்தை ரோடு ஓரங்களில் கொட்டி வைத்துள்ளனர்.இதுகுறித்து ஜாதிக்கவுண்டன்பட்டி விவசாயி வீரன் கூறுகையில், ""ஏக்கருக்கு 50 ஆயிரம் ரூபாய் வரை செலவாகியுள்ளது. கிலோ 5 ரூபாய்க்கு, வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். ஆனால், செடியில் இருந்து பறித்து,

அனுப்ப 5 ரூபாய் செலவாகும். இதனால் பறிக்கவில்லை. தெரிந்தவர்கள், இலவசமாக எடுத்துச் செல்கின்றனர்," என்றார்.

## விவசாயிகளுக்கு ஆலோசனை

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 01,2012,22:44 IST

கருத்தை பதிவு செய்ய

பழநி : வேளாண் உதவி இயக்குனர் ரவிச்சந்திரன் கூறியதாவது:

பழநி சுற்றுப்புறக் கிராமங்களில் 5,500 எக்டேரில் சாம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டு, அறுவடைக்கு தாயராக உள்ளது. அறுவடைக்கு பின், கோடை பட்டத்திற்கு உரிய உளுந்து, தட்டப்பயறு, பாசிப்பயறு பயிரிடுவதால் மண்வளம் பெருகும். தண்ணீர் தேவையும் குறைவு தான். இதற்கான விதைகள், பூச்சி மருந்தை வேளாண் அலுவலங்களில் 50 சதவீத மானிய விலையில் வழங்கி வருகிறோம், என்றார்.

## கொள்முதல்நிலையம் திறப்பு

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 01,2012,22:44 IST

கருத்தை பதிவு செய்ய

பழநி : அ.கலையம்புத்தூரில் நெல் கொள்முதல் மையத் தை வேணுகோபாலு எம்.எல்.ஏ., திறந்து வைத்தார். ஊராட்சி ஒன்றிய தலைவர் செல்லச்சாமி, ஒன்றிய செயலாளர் ஆறுமுகம், ஊராட்சி தலைவர் சிவசுப்ரமணியன், மைய அதிகாரி சக்திகணேஷ் பங்கேற்றனர்.

## கால்நடைகளுக்கு பயன்படும் மரவள்ளிக்கிழங்கு செடிகள்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 01,2012,23:16 IST

கருத்தை பதிவு செய்ய

தேவாரம் : தேவாரம் பகுதியில்,பசுந்தீவனம் தட்டுப்பாட்டால் மரவள்ளி கிழங்கு செடிகளை கால்நடை தீவனமாக பயன்படுத்துகின்றனர்.

தேவாரம் பகுதி முழுவதும் விவசாயம் சார்ந்த பகுதி. உபதொழிலாக கால்நடை வளர்ப்பில் விவசாயிகள் ஈடுபடுகின்றனர். மூன்று மாதங்களாக மழையில்லாததால், கால்நடைகளுக்கான பசுந்தீவனம் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.மரவள்ளி கிழங்கு செடிகள் பசுந்தீவன தட்டுப்பாட்டை

போக்க விவசாயிகளுக்கு உதவுகிறது.

கால்நடை வளர்ப்போர் கூறுகையில், "மரவள்ளி கிழங்கு தோண்டும் போது செடிகள் தனியாக பிரிக்கப்படுகிறது. இவற்றை சேகரித்து வெயிலில் உலர்த்தி கால்நடைகளுக்கு தீவனமாக கொடுக்கிறோம். இரண்டாயிரம் ஏக்கரில் மரவள்ளி கிழங்கு தோண்டப்படுவதால் மூன்று மாதங்களுக்கு தீவன தட்டுப்பாடு இல்லை, என்றனர்.

---

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## *91 சதவீத தேயிலை தூள் விற்பனை*

*குன்னூர், ஏப்.2–*

*குன்னூர் ஏல மையத்தில் 91 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. மேலும் தேயிலை தூள் கிலோ ஒன்றுக்கு ரூ.3 வரை விலை உயர்வு ஏற்பட்டது.*

*ஏலம்*

*குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் வாரந் தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை ஏலம் நடைபெற்று வருகிறது. ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் பங்குபெற்று தேயிலை தூளை ஏலம் எடுத்து வருகிறார்கள்.*

*விற்பனை எண் 13–க்கான ஏலம் கடந்த 29, 30 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. ஏலத்திற்கு மொத்தம் 11 லட்சத்து 29 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 7 லட்சத்து 90 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 3 லட்சத்து 39 ஆயிரம்டஸ்ட் ரகமாகவும் இருந்தது.*

*விலை உயர்வு*

*ஏலத்தில் உள்நாட்டு வர்த்த கர்கள் அதிகளவில் பங்கு பெற்றனர். பாகிஸ்தான், ரஷ்யா ஆகிய இரு வெளி நாட்டு வர்த்தகர்கள் மட்டுமே ஏலத்தில் பங்குபெற்றனர். ஏலத்தில் தேயிலை தூளுக்கு தேவை அதிகரித்து இருந்ததால் 91 சதவீத தேயிலை தூள் விற்பனைஆனது.*

*இதன் காரணமாக அனைத்து ரக தேயிலை தூளுக்கும் 3 ரூபாய் விலை உயர்வு ஏற்பட்டது. சி.டி.சி. ரக தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலையாக 171 ரூபாயாக இருந்தது.240 ரூபாய் என்பது ஆர்தோடக்ஸ் தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலை யாக ஏலம் சென்றது.*

*இலை ரக தேயிலை தூள்*

*சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதாரண வகை 50 ரூபாயில் இருந்து 55 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 100 ரூபாயில் இருந்து 150 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.*

*டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 55 ரூபாயில் இருந்து 60 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 90 ரூபாயில் இருந்து 158 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றன.*

*விற்பனை எண் 14–க்கான ஏலம் வருகிற வியாழன், வெள்ளிகளில் நடக் கிறது. ஏலத்திற்கு மொத்தம் 9 லட்சத்து 63 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.*